04.01.2024
அசல் வழக்கு எண்: 89/2008

வா.சா.3 சாட்சி சுந்தரபாண்டி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 4, 5 மற்றும் 7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கின் வாதி ஜெயகண்ணு எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனார் ஏற்கனவே வா.சா.ஆ1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒத்தியை மீட்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை ஒத்தி வைப்பதற்கு எனது தகப்பனாருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சர்வே எண் 252/2A2 ல் கட்டுப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து UDR சர்வே எண். 222/21 ல் கட்டுப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி சர்வே எண். 252/2A2 மொத்த விஸ்தீரணம் 21 செண்டு என்றால் சுமார் 35 செண்டு வரும். அடி அளவில் 90x90 ச.அடி ஆகும்.

தாவா சொத்து நத்தம் சர்வேயில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்தபோது 4, 5 மற்றும் 7 பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. இந்த வழக்கு ஒத்தி சம்பந்தப்பட்ட வழக்கு ஆகும். 4, 5 மற்றும் 7 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து 4, 5 மற்றும் 7 பிரதிவாதிகளின் முன்னோர்கள் காலத்தில் இருந்து அவர்களுடைய அனுபவத்தில் உள்ளது என்று எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அதனை தெரிந்துகொண்டே படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது தகப்பனாருக்கு மொத்தமுள்ள 21 செண்டில் 4 செண்டு மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. 4, 5 மற்றும் 7 பிரதிவாதிகள் எங்களுக்கு 4 செண்டு மட்டுமே பாத்தியம் என்று சொல்லகூடிய இடத்திற்கு வடக்கே சிவன்காலை இடம் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுடைய இடம்தான் உள்ளது. மேற்படி 4 செண்டிற்கு தெற்கே தவராஜன் இடம் உள்ளது என்றால் தாவா சொத்தான 90x90 ச.அடி சொத்திற்கு தெற்கே தவராஜன் இடம் உள்ளது. மேற்படி 4 செண்டிற்கு கிழக்கே பொது சந்தும் மொக்கை என்ற மொக்கராஜ் வீடு உள்ளது என்றால் சந்து இல்லை வீடு மட்டும் உள்ளது. மேற்படி 4 செண்டிற்கு மேற்கே ஜெயக்கொடி மற்றும் ராஜாங்கம் என்பவருடைய இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்குமாலுக்கு உட்பட்ட 4 செண்டை மட்டும்தான் எனது தகப்பனார் அனுபவம் செய்து 1ம் பிரதிவாதிக்கு ஒத்தி வைத்துள்ளார் என்றால் 4 செண்டு என்பது தவறானது ஆகும். ஆனால் நான்குமால் மட்டும் சரியானது.

தெற்கே உள்ள தவராஜன் என்பவர் அனுபவத்தில் உள்ள இடம் கிழமேல் 73 அடியும், தென்வடல் 36 அடியும் உள்ள இடம் என்றால் சரியல்ல. மேற்படி தெற்கே உள்ள இடத்தில் ஒரு பகுதியை தவராஜன் என்பவருடைய மூதாதையரான மாயாண்டி என்பவர் 09.10.1922ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மீதமுள்ள பகுதியை 4 பிரதிவாதியின் மூதாதையரான மேற்படி மாயாண்டி என்பவருடைய மக்கள் 03.05.1940 மற்றும் 10.07.1940 ம் தேதிகளில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணங்களின் அடிப்படையில் 4 ம் பிரதிவாதியின் மூதாதையர் மற்றும் அவரது வாரிசுகள் தற்போது வரை மேற்படி சொத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தவராஜன் என்பவர் கழிப்பறை மற்றும் மாட்டுகொட்டம்

அமைத்துள்ளார் என்றால் சரியல்ல.

(4, 5 மற்றும் 7 ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.3 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)